# ஆதி மார்க்க னீதி மொழி

**October 2024**

***இதழ் 39 – அக்டோபர் மாதம் 2024 வெளியீடு***
***© AMNA Trust, Chennai***



## மூலமந்திரம்

முத்திபூர்ணம்!
மெய்யாக மெய்யாகவே சதுர்யுகங்ஙோடி கால மக்களிடத்திலும் உள்ள சர்வ மூலமந்திர னிரூபிக மகான்மியராகிய யுகவான் சாலை ஆண்டவர்களே முத்தி பாலிப்பு.

## பாத பூஜை

சுயம் பிரகாச னித்தியானந்த பிரம்ம சொரூபத்தினை அறியாது அஞ்ஞானமென்னும் திமிரத்தால் குருடாயிருந்த எங்களுடைய கண்களை ஞானமென்னும் அஞ்ஞன சலாகையால் திறந்த தேசிகேந்திரரே தேவரீருடைய திவ்ய திருவடிக் கமலங்ஙளுக்கே னமஸ்காரம்.

## மகாசங்ஙல்ப மந்திரம்

மறலி என்கிற எமனுடைய அவமான அவஸ்தை வந்து தீண்டும் அடையாளம், கசப்பு தீட்டு பிணனாற்ற ஜலம் வெளியாகி யுகங் ஙோடிகால னரக வேதனைக்குப் போகாமல் அதைமாற்றி, பரமபத னித்திய மகிழ்ச்சி வாழ்வு வரத்தில் ஏற்றவே சதுர்யுகத்திலும் உண்டான எல்லா ஜாதி மத வேதங்களும் வந்திருக்க அந்த அகமிய மகா அதிவல்லப தெய்வீக பிரம்மவித்தைச் செயலானது மானெடுங்ஙாலங்ஙளாக மக்கள் புழக்கத்தில் இல்லாது இந்த உலகத்தை விட்டு மறந்து மறைந்நே போய்விட்ட இறுதிக்காலமாகிய இதுனேரம் எமபயத்தைக் கடத்தி மீண்டும் அதே பிரம்மவித்தைச் செயலாகிய சுவர்கப்பதி பரமபத முத்திச் செயலினில் ஏற்றி வைக்கும் கல்கி மகதி என்னும் மூக்குக்கு வெளியே மூச்சு ஓடாத தவமுடைய ஊண் உறக்கமற்ற எங்ஙள் குலதெய்வம் மெய்வழிச்சாலை ஆண்டவர்கள் மெய்மதத்தில் னாங்ஙள் சேர்ந்து ஆகிக்கொண்டிருக்கின்றோம்!

எதார்த்த னன்மனத்தினர் யாராக இருந்தாலும் இதில் சேர்ந்து தேவப்பிறப்பிலே பிறந்து ஆகிக்கொள்வதற்கு ஆண்டவர்களுடைய ஆசீர்பாதம்!



Copyright © AMNA Trust, Chennai October 2024

# குருபிரான் அவர்களின் முன்னுரை



ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்களே எதார்த்த நன்மன சற்சன மக்களே! ஆதி மார்க்க னீதி அவையின் செப்டம்பர் மாதம் அவை நிகழ்வு 16ம், இசை வகுப்பு 3ம் இணைந்து 39ஆவது இதழாக ஆதி மார்க்க னீதி மொழி உங்கள் கைகளில் தவழ்கிறது. மனித சமுதாயத்தில் ஒவ்வொரு கால நேரத்திலும் இயல்புடன் எதார்த்த உள்ளத்துடன் வாழ்கின்ற மக்கள், தங்களின் எண்ணம், சொல், செயல் மூலமாக வாழ்கின்ற வாழ்வின் அர்த்தம் இன்னதென தெரிந்து புரிந்து வாழ்வதற்கென, பிரதி மாதமும் வரும் சஞ்சீவியே இந்த மின்னணு சஞ்சிகை. இது படித்து புரிந்தாலும் கூட, உணர்ந்து செயலாக்க வேண்டிய ஒன்றாக உள்ளது.

வையகத்தையும் வானகத்தையும் சர்வ கால காலங்களையும் சர்வ காலத்திற்குள் அடங்கிய அழிவிலா னித்திய பூரண மேம்பாடுகள் அனைத்தையும் கையில் வரவழைத்துத் தரும் கிரயத்தை உடையது இந்நக் கிரந்நம் என சாலை ஆண்டவர்கள் அருளியது போல், படிப்பதால் சத்தியமாக கையில் வராத இதனை கையில் வரவழைக்க வேண்டும் எனில் அதற்கு உரியவரிடம் சென்று, சரணாகதி அடைந்து, கெஞ்சி கேட்டு ஞான சபையில் ஆகி மெய்ஞான நிலைகளைப் பெற வேண்டும். அப்படி ஆகி உலகிற்கு ஒரு அரும் சூரியனாக, வாலுருவி விட்ட சிங்கமென வந்தவர்களே சாலை ஆண்டவர்கள். அவர்கள் கைவரவாக்கிக் கொண்ட மெய்ச்செயல் இன்னதென உணர்ந்து அதன் மூலமாக உலக மக்களை உய்விக்க கூடிய ஒரு அரும்பெரும் செயலுக்கு துணைக் கருவிகளாக இருப்பவர்களே ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்கள்.

முன்னர் வந்த ஞானிகள் உண்டாக்கிய ஞான சட்டத்தை மாற்றி சம்சாரியும் ஞானம் பெற அருள் பாலித்த பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்களின் அருளுக்குள் ஆகி அவர்களின் திருநாமத்தை ஓங்கி உரத்த குரலில் அறிக்கை செய்யும் அறிவைப் பெற்ற மக்களாக நாம் இருக்க வேண்டும். உன்னத உயர்ந்த உள்ளத்துடன் சாலை ஆண்டவர்கள் அருளிய அரும் பெரும் நிலை யாவற்றையும் அறிவால் உணர்வால் பெரியோர்கள் அருளிய ஞானத்தால் உணர்ந்து, அதனை மக்களுக்கும் உணர வைக்க வேண்டிய கடமையை நோக்கமாக வைத்து உண்டாக்கப் பெற்றதே ஆதி மார்க்க னீதி அவை.

இந்த இதழின் 16 அவை நிகழ்விலும் என் மக்கள் சொல்லியுள்ள சேதி யாவும் செயலுள்ள ஒன்றைப் பற்றியே. அசலை நினைவூட்ட வந்த நகலே போதும் என்ற மனநிலையில் உள்ள மக்களுக்கு உஜார் ஜாக்கிரதை உணர்த்தி உலகம் முழுதும் உய்ய வேண்டும் என்ற ஒரே நோக்கமுடன் அணுவளவும் அனீதி கலவாது னீதியை மாத்திரம் னித்தியமாகப் பொதிந்து வருவதே ஆதி மார்க்க னீதி மொழி. சத்திய வேதத்தின் மகா வாக்கியத்தின் படி தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும், தேடுங்கள் கண்டு அடைவீர்கள் என்றாலும், எங்கே போய் தட்டுவது,



Copyright © AMNA Trust, Chennai 

**கேட்பது, எங்கு எதைத் தேடி அடைவது என்ற செய்தியை செயலாக்கும் வழி கூறுவதே இந்த சஞ்சிகை. செயலுள்ள மெய் ஞான நிலைகள் யாவும் உள்ளடக்கிப் பேசுகின்ற ஆதி மார்க்க னீதி அவையின் செய்திகளை தொய்வின்றி ஒவ்வொரு மாதமும் கொண்டு வந்து தருவதே ஆதி மார்க்க னீதி மொழி. ஆவணி மாத சிறப்பாக உலகம் முழுதும் கொண்டாடும் விநாயக சதுர்த்தியின் உண்மை தாத்பரியம் இன்னதென இதுவரை மக்கள் கேட்டோ பார்த்தோ அனுபவித்தோ அறியாத விஷயத்தை விநாயகர் அகவல் சிறப்பாகவும் மேலும் ஒவ்வொரு மாதத்தின் சிறப்பையும் தாங்கி வருவதே இந்த மின்னணு சஞ்சிகை.**

**தெய்வீகச் செயலை மக்கள் மத்தியில் கொண்டு சேர்க்கும் இந்த பரோபகாரப் பணி செய்யும் என் மக்கள் எல்லோரும் சீர் சிறப்புடன் வாழ எல்லாம் வல்ல பெருமானின் திருவடிகளைப் போற்றி வணங்கி ஆசீர்பதிக்கிறேன். இதனைப் பார்த்து படித்து தொடரும் மக்களும் மெய்யறிவு பெற்ற மக்களாகத் திகழ பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்களின் திருவடி போற்றி வணங்குகிறேன்.**

**நமஸ்காரம்.**

*சாலை ரவி*

**நிறுவனர், ஆதி மார்க்க னீதி அவை**



Copyright © AMNA Trust, Chennai 

*னீ பார்க்க இறந்நுபோன உனது பாட்டன், இப்போது ஒரு எல்லையில் உடல் எடுத்து வந்நால், உனக்கு அவரை அடையாளம் தெரியுமா? தெரியாது. அவ்வாறாயின், பாவம் மிகுந்நு னாஸ்திகம் வலுக்கொண்டெழுந்நு, இருள் கப்புகிற காலத்தில், உலகுபடு அழிதுயர் தீர்ப்பதற்காக ஓவாது பிறந்நிடுவேன் யுகந்நோறும் யுகந்நோறும் என்று கீதையில் சொல்லியுள்ள ஸ்ரீ கண்ணபிரான், இப்போது உடல் எடுத்து வந்நால் அவரை உனக்கு அடையாளம் தெரியுமா? ஆகவே, அவர் கையில் அதுனாள் கொண்டுவந்ந அந்நப் பிரம்மவித்தைச் செயல் படைத்தவர் எந்ந எல்லையில் காணப்பெறுகிறாரோ அவர்தான் பகவான். அந்ந எல்லையே குருக்ஷேத்திரம்.*

*அழிந்நு போகிற சரீர வளர்ச்சிக்குரிய உணவு லாபம் உனக்குத் தெரியும். பண லாபம் தெரியும். அழிகீர்த்தி லாபம் தெரியும். ஆனால் உன் கண்ணுக்கும் செவிக்கும் மற்றைய புலனுக்கும் வாக்குக்கும் உணர்ச்சிக்கும் எட்டப்படாத அந்ந வல்லப வஸ்துவோடு கலப்பதில் வரும் லாப னஷ்டம், பொய் மெய் தெரியுமா? தெரியாது. ஆகவே அதோடு உறவாடிக் கலந்நு அதில் லாப னஷ்டம். தெரிந்நவர்கள் வாய்க்கும்போது னம் அறிவை அவர்கள்பால் தத்தம் செய்து விட வேண்டும். அவர்கள் அறிவை முன்னே வைத்து, னாம் பின்னே னடக்க வேண்டும்.*

*~ சாலை ஆண்டவர்கள்*



Copyright © AMNA Trust, Chennai

# ஆதி மார்க்க னீதி அவையின் 2024 செப்டம்பர் மாதம் அவை நிகழ்வுகள் – 2024 அக்டோபர் மாதம் வெளியீடு

## 01-09-2024 ~ ஞாயிற்றுக்கிழமை ~ காஞ்சிபுரம் அவை
## தொகுப்பு: ஸ்ரீமதி. சண்முகப்ரியா செந்தில்

சாலை ஆண்டவர்கள் அருளிய ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது.

*ஜீவசகோதரர் கௌதம்:*

குருவே மாதா, பிதா, தெய்வம். கோவில் சிலைகளை தெய்வமாக எண்ணிய நமது எண்ணம் யாவும் அறியாமையே. அறிவாகிய இறைவனை அறிவிக்க வந்த பெரியோர்களை நம்பாது, அறியாமையை விதைக்கும் அறிவிலியை நம்புவதே மனிதனுக்கு சாபக்கேடாக உள்ளது. பிறப்பின் காரணமான இறப்பை அறிந்தே மனுக்குலம் பிறவாமை பெற முடியும். ஆறாம் அறிவை அறிவிக்கும் அருட் குருவே அருட்பெருஞ்ஜோதி. துவைத நிலையில் இருக்கும் ஒருவனை அத்வைத நிலைக்கு ஆக்கி வைப்பவரே ஆசான். பிறப்பு இறப்பிற்கு காரணமான மனதுள்தான் மனிதனை பிரகாசிக்க செய்யும் ஒளி உள்ளது. கற்சிலையை கடவுளாக மாற்றும் கடவுளே நாம்தான் என்பதை மனிதன் மறந்து மனம் போன போக்கில் போகிறான். அறியாமை எனும் தூக்கத்தில் சுகம் காணும் மனிதன், தூங்காமல் தூங்கி சுகம் காணும் அறிவு நிலையை அறிந்து கொள்ள ஆசான் வேண்டும். கேள்வியின் நாயகனாகிய இறைவனே அவரவரிடத்தில் பதிலாகவும் இருக்கிறார்.

*ஜீவசகோதரர் சங்கர்:*

நிஜமான இறைவனை தரிசித்து நிம்மதி பெறும் இடம் எண்சாண் உடலுக்கு பிரதானமான சிரசில் இருப்பதை அறிவு வடிவாக வரும் ஆசானே அறிய வைக்கிறார்கள். தூங்காமல் தூங்கும் அரிதுயிலே அறிவின் நிலை. புகைந்து கொண்டே இருக்கும் யாககுண்டமாகிய மனதில் உள்ள பொருள்கள் குருபிரானின் திருவாக்காகிய தீயினால் எரியும் போதே மனம் தெளிந்து, அறிவாகி மெய் உணர்வு உண்டாகும். குருவின் அருளால், புறம் காட்டும் மனக் கண்ணாடியின் ரசம் அழியச் செய்து, அகம் கண்டு மெய் வணக்கத்தில் கலக்க முடியும். உள்ளமாகிய வைகுண்டம் பாய்ந்தவர்க்கே உள்ளங்கை ரேகையின் ரகசியம் தெரியும். அழிவற்ற ஆசான் திருமேனியே அவரவரின் இன்பொருளாக அழியாப் பொருளைக் காட்டும் அறிவாக உள்ளது. உயிரினும் மேலான ஒழுக்கமே ஒரு பொருளாம் உறு பொருளான இறைவனை தரிசிப்பதற்கான சாதனம் என்ற பகிர்வுடனும் பரிசுத்த ஆவி தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை நிறைவானது.

## 01-09-2024 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி அவை
## தொகுப்பு: ஸ்ரீமதி. ஹேமலதா தியாகராஜன்

பரிசுத்த ஆவித் தெய்வம் அருளிய **அழியாப்பதி குடியேறிய னாயக மென்குருவின்...** என்ற ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவசகோதரி செல்வி தாமோதரன்:*

ஒரே தாய் வயிற்றின் குழந்தைகளின் செயல்களும் குணங்களும் அதனதன் வினைக்கு ஏற்பவே அமைகின்றன. ஒரு மெய்க்குருவின் அருளே நம் வினை தீர்த்து சிற்றணு வடிவாகிய நமது தோற்றத்தை தரிசிக்கச் செய்கிறது.

*ஜீவசகோதரர் தாமோதரன்:*

புலனைந்தும் வெல்லும் வீரம் தரும் கல்வியே மெய்க்கல்வி. குருபிரான் அருளும் அக்கல்வியே தீர்த்தம். சூரியனின் வட, தென் திசை பயணம் உணர்த்துவது அறிவை நோக்கிய



Copyright © AMNA Trust, Chennai 

மனதின் பயணமாக உள்ளது. துவைதமாக இருக்கும் நம்மை அத்வைதத்தில் ஆக்குபவரே ஆசான். அவர்களே ஆலவாய் திறந்து வேத முடியாகிய அடி-முடி-னடுவின் ரகசியம் அறியச் செய்கிறார்கள்.

*ஜீவசகோதரி திவ்யபிரியா:*

சூரியனின் பயண திசை மாறும் தை மாதத்தில், நம் பழைய வினைகள் கழிந்து என்றும் புதியவனான இறைவனின் திருவடி சேரும் செயலின் தத்துவமாக **போகிப் பண்டிகை**யும், நம் அறியாமை இருளகற்றி ஆசான் தன் னாத தொனியால் நம் அறிவில் மகிழ்ச்சி பொங்கச் செய்யும் நாளாக **பொங்கல் திருநாளும்**, செல்வச்சீர் னபியான ஆசான் அருளும் செவிச் செல்வம் செவி மடுத்து நமது வாழ்நாளை என்றும் குறையாப் பணமாக மாற்றும் **செல்வப் பொங்கலாகவும்**, குருவருளால் ஆறாம் அறிவறிந்து, நமது சொந்த மெய் பொருளைக் காண்பது **காணும் பொங்கலாகவும்** இருக்கின்ற செயலை ஆசான் காட்டும் வழியில் ஏகாந்தம் அறிந்து, சிவனெனும் வாடாத தீபத்தை அடைவதனை ஔவை பிராட்டியும் **இனிது இனிது ஏகாந்தம் இனிது** என அருளியுள்ளார்.

*ஜீவசகோதரி மாலைபுஷ்பம்:*

இறைவன் வழங்கிய அருட் கொடையே நமது வயது வாழ்நாள். இதனை அறிய வைத்து நஷ்டத்தில் செல்லும் வாழ்நாளை லாபகரமாக மாற்றும் ஒருவரே மெய்க் குருவாக வருகிறார்கள்.

*ஜீவசகோதரர் சிவகுமார்:*

நாம் தன்னறிவு கொண்டு அறியும் ஞானம் யாவும் அஞ்ஞானம். பேரறிவு வடிவாக வரும் குருபிரான் அருளும் ஞானமே மெய்ஞானம். அவர்கள் அருளும் பிரம்மவித்தை செயலே அடக்கம்.

*ஜீவசகோதரி சரோஜா:*

அனித்தியத்தை நோக்கியே அலையும் மனதை அறிவாக மாற்றி னித்தியத்தில் குடியேறி குன்றாத வாழ்வு வாழ வழி அருள்பவரே மெய்க் குருபிரான்.

*ஜீவசகோதரி பாரதி பார்த்திபன்:*

உலக வாழ்வில் நமது செயலுக்கான பலன் கிட்டுவது போல், ஞான வாழ்விலும் நமது செயலுக்கான பலன் இன்னதென குருவருளால் தான் அறிய முடியும். முயலகனாக உள்ள நமது மனதை மிதித்து ஏறி அறிவாக மாற்ற ஆசான் அருளும் வித்தையே பிரம்மவித்தை.

*ஜீவசகோதரி கவிதா வெங்கட்:*

நவக்கிரக கோள்களின் பிடியிலிருந்து நம்மை விடுவிக்கும் நாதம் விளைந்த நாதனின் அருளே நம்மிடம் முச்சுடர் தோன்றச் செய்து காலனை வெல்லச் செய்கிறது. சச்சிதானந்தப் பொருளான அவர்களின் வாய்மையே நம் பிறவிப்பிணி தீர்க்கிறது.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவானது.

*தெய்வனாயகி! ஒரு சற்குருவை அடைந்து சீடனாகாத அன்னியன் எவனுக்கும் குரு ரகசியமாகிய இதைச் சொல்லலாகாது. னரர்கள் மனித உடலெடுத்த பயனை அடைவதற்கு னிச்சயமாகக் குரு பக்தியே மூலகாரணமாக இருக்கிறது.*

***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai

## 05-09-2024 ~ வியாழக்கிழமை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீ. வாசுதேவன்

பரிசுத்த ஆவித் தெய்வம் அருளிய **மன்னுயிரனைத்தும்...** என்ற பாடலுடனும் வள்ளலார் அருளிய **நல்ல மருந்து இம் மருந்து...** என்ற பாடலுடனும் அவை இனிதே மலர்ந்தது.

*ஜீவசகோதரர் சங்கர்:*
தன்னுயிராம் இறைவனை தன்னில் அறிந்தவரே எவ்வுயிரையும் தன்னுயிராக எண்ணுவர். செவி மடுக்கும் ஆசானின் நாத மருந்தே சஞ்சலம் தீர்த்து மரண பயம் போக்கி பிறவிப்பிணி மாற்றும்.

**திருமெய்ஞானக் கொரல் : வாக்கியம் எண் 4ன் தொடர்ச்சி - குருபிரான் அருளமுதம்:**
தன் படைப்பு யாவும் மனுவுக்கென படைத்த இறைவனின் நிகரற்ற கருணை, மனு சொர்க்க பதி வாழ்வு வாழவே. அதற்கான அறிவை ஒரு மெய்க்குருவினிடம் பெற வந்ததுவே மானிடச் சட்டை.

**பூரணப்புதையல் - குருபிரான் அருளமுதம்:**

16 கலைகள் கொண்ட பூரணத்தின் ரகசியமும் புலன் வழி பற்றி ஓடும் மனதை மாற்றும் வித்தையையும் உரைப்பதுவே பூரணப் புதையல். *வேகாக்கால்-சாகாத்தலை, அவ்வு-அகரம், சத்து-சித்து, அறிவு-அறிவாகாரம், ஆவி-சுத்தாவி, ஜீவாத்மா-பரமாத்மா யாவும் பூரணமே.* நானிலத்தில் நர ஜென்மம் எடுத்த அறிவிலியை அறிவு வடிவாக ஆக்க வந்ததே ஆதி மார்க்க னீதி அவை. உயிர்கள் யாவும் உய்ய, வையகத்து மதம் முழுதும் கையகத்து அடக்கி வந்த பெரியோர்களே உலகம். அக்கனைக் கண்டு அகரத்தில் ஆகும் பொழுதே அகங்காரம் நீங்கும். இறைவன் இருக்கும் தலமும் விஸ்வ ரூபமும் காட்டுகின்ற மெய்க்கல்வி படிப்பதன்றி பழகுவதேயாகும். அசலை அறிய அறிவு வடிவினர் உண்டாக்கிய சிலை வடிவமே, 10 வயதான கன்னியின் தோற்றம். எல்லா பாஷைகளிலும் இலங்கும் ஏகாட்சரமே தலைவிதி எழுத்தை மாற்றி வைக்கும் எழுதாத எழுத்தாகும். நமன் கண்டு அஞ்சும் நாசி வழியே மூச்சு ஓடாத தவம் கொண்ட பெரியோர்களே நம் பிறவிப்பிணி தீர்க்கும் தீர்க்க தரிசிகள், என்ற குருபிரானின் அருளமுதுடனும் பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை இனிதே நிறைவானது.

## 07-09-2024 ~ வினாயகர் சதுர்த்தி சிறப்பு அவை
## சனிக்கிழமை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்

சதுர்யுக நாயகராம் பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்களின் திருவடி போற்றி **ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை...** எனும் திருமந்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**
முழு முதற் கடவுளாக அரூபத்தில் ஏகாட்சரமாகவும், ரூபத்தில் தத்துவ வடிவாகவும் உள்ள வினாயகரை காப்பாக வைத்தே பெரியோர்கள் பாடல்கள் அருளியுள்ளனர். வேழ முகமாம் சதுர் முகத்தை வியாழ முகமான குருமுகத்தால் அறிந்து பிறக்கும் தேவப் பிறப்பே சதுர்த்தியாகும். வினை தீர்க்கும் நாதம் விளைந்த குருவின் திருக்கரம் தாங்கி இருப்பதே கோடாயுதம். பிரணவ சொரூபராம் குருவருளால் நெற்றிக்கண் திறந்து ஐம்புலனும் ஆறுமுகமான பொருளுக்குள் அடங்குமிடமே காருண்யக் கருப்பாம் கரிமுகமாகவும், முப்பொருளும் இணைந்த சின்முத்திரையே ஏகாட்சர வடிவான பிள்ளையார் சுழியாகவும்,



Copyright © AMNA Trust, Chennai 

செவியைப் பிடித்து வினாயகரை வணங்கும் தத்துவம் ஞான முதலாக கர்ணம் இருப்பதையும், ஐந்து விரல் பதித்த பூரணம் பஞ்சாட்சர ரகசியத்தையும் உணர்த்துகிறது.

*ஜீவசகோதரர் வடிவேலன்:*

அறிவெனும் பூரணமே வினாயகரின் தத்துவ வடிவம். சூரிய வெப்பத்தில் உள்ள நீரை உண்டு வளரும் எருக்கம் பூவின் தத்துவம், குருவான ஞான சூரியனின் னாத வெப்பத்தை எருவான செவி உணவாக உண்டு, அவ்வாகிய ஜீவனை அறிவதாம். குருவருளால் ஐந்தாம் யோனியில் பிறந்து ஆறறிவறிந்து இறை திரு சக்கரமாம் மூஷிக வாகனம் ஏறி, அகமுகப் பயணம் சென்று வீடடைவதே பிரம்ம வித்தை. வாகனத்தின் ஓட்டுனராயும் எரிபொருளாயும் உள்ள பரிசுத்த ஆவியால் யுகங்கள், தேகங்கள் நான்கும் கடந்து, இறை இல்லம் சென்று வருவதே ஹஜ், காசி யாத்திரையாகும். குருபிரான் தன் திருப்பார்வையால் நம்மை சுண்டி இழுத்து பாவ ஜலம் சுண்டி தவமெழச் செய்யும் தத்துவமே கருமூக்குக் கடலைச் சுண்டல்.

**குருபிரான் அருளமுதம்:**

ஐவழி விளைவுக்கு அப்பால் உள்ள மெய்வழி எனும் மேடு செல்லும் பயணம் நுதற்கண் கொண்டு உடல் கண்டு உயிர்வழிப் பற்றி ஆத்ம வீடடையும் மரணமிலாப் பெருவாழ்வாக உள்ளது. பரமாத்மா தன் சுண்டு விரலால் கோவரத்ன மலை தாங்கிய செயலின் தத்துவம் ஜீவன் தன் உடலை தாங்கிப் பிடிக்கும் செயலாக உள்ளது. சண்முகன், நான்முகனுக்கும் தலைவனாம் வேழ முகமெனும் குருமுகத்தால் பிரம்மத்தை தன்னில் உணர்ந்தவரே பிறவியற்றவர் என வாழுங்கலை வல்லவரான வினை தீர்க்கும் வினாயகராம் குருபிரானின் அருளமுதுடனும் பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை நிறைவானது.

## 08-09-2024 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி அவை
## தொகுப்பு: ஸ்ரீ. ஜெய்குமார்

பரிசுத்த ஆவித் தெய்வம் அருளிய **அந்ந னாளில் அணைத்தெனை யாட்கொண்டு...** என்ற ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே உதயமானது.

*ஜீவசகோதரர் மகேஷ்குமார்:*

இக்கடம் விட்டு அக்கடத்துள் ஆக்கி ஆதியுடன் இரண்டற கலக்கச் செய்வதே உபதேசம் என்பது ஆண்டவர்கள் திருவாக்கு. குருவின் உப்பாகிய நாதத்தால் ஒன்பது வாசல் உள்தாளிட்டு றப்பாகிய இறைவனுடன் சேரும் நாளே நல்ல நாள். ஒரு மொழியாம் குருமொழியின் உபாயத்தால் மறுபிறப்புற்று, மனம் அலைவற்று சாமுன் சாகப்பழகி வீண் மதிப்பு விட்டு நன்னிலத்தில் குடியேறி நனவுலக வாழ்வில் வாழ்வதே வாழ்வு.

*ஜீவசகோதரி புன்னகை:*

குருவருளால் ஆறாம் அறிவறிந்து மனுவாகி தன்னுள் இருக்கும் ஈசனைக் காண்பதே தன்னை அறிதல். அசைவற்ற பிரம்மத்தை அறியும் செயலே பிரம்மவித்தை. நம் இழிகுணத்துடன் போராடுவதே ஜிகாத் என்பது நபிபெருமான் திருவாக்கு. நாதம் விளைந்த நாயகனின் நற்சிலம்பின் ஓசையே நம் நாளது வீணாகாமல் நல்ல கதி அருளும்.

*ஜீவசகோதரி வைஷ்ணவி:*

சொர்க்கம், நரகம் இன்னதென உயிர் உள்ள போதே அறிந்து ஒரு மொழியாம் குரு மொழி மெய்ப்பால் அறிவதே அறிவு. நவக்கிரகக் கோளரி வாளராகிய எதார்த்த ஓர் தேவ குருவின் தயவே நம்மை வீடுபேறு அடையச் செய்யும்.

*ஜீவசகோதரர் கவனமணி:*

சர்வ உயிர்களுக்கும் மிக அவசியமான காற்றைப் பிடிக்கும் கணக்கை அருளும் குருவின் தயவு கொண்டே காலனை வெல்ல முடியும்.



Copyright © AMNA Trust, Chennai

*ஜீவசகோதரி மோனிஷா:*

மாறாத மெய்யாக நம்மிடம் இருக்கும் நித்தியப் பொருளை பெரியோர்களின் இரக்கம் மூலமே நாம் அறிய முடியும். ஜீவனாகிய சிவனை தேடாதவன் நரன், தன்னுள் தேடுபவன் மனு, தேடி அறிந்தவன் தேவன் என்பது வேதத் தீர்ப்பு. ஜீவன் புலன் வழி ஓடாத செயலே புண்ணியம்.

*ஜீவசகோதரி ஜெயாகௌதம்:*

நான் யார், வேதம் எது என்பதும் ஆறாவது அறிவே அவரவரின் சொந்த தேகம் என்பதையும் அறிவித்து நம் அறியாமை அகற்றும் அருந்தலமாக விளங்குவதே ஆதி மார்க்க னீதி அவை.

*ஜீவசகோதரர் சுந்தரமூர்த்தி:*

வந்த வேதமாகிய ஆசானின் அருளமுதத்தை செவிமடுத்து நம்மிடத்தில் செயலாக்கும் பொழுதே வீண் நாள் வாழ் நாளாகிறது.

*ஜீவசகோதரர் சிரஞ்ஜீவி:*

உலக வாழ்விற்கு தேவையான மனிதனின் பேச்சு உணர்ச்சியாகவும், உலகினை உய்விக்கும் ஞானிகளின் பேச்சு மெய் உணர்வாகவும் உள்ளது. மாறாத சப்தமுடன் வாழும் ஐயறிவு ஜீவ பேதங்கள் போலன்றி, இறைவனைப் பற்றி பேசி பகர்வதும், உள்ளதை உள்ளபடி செப்புவதும், கூராகிய அறிவைப் பற்றி கூறுவதும், கேள்விக்கு பதில் உரைப்பதும், நயமாகப் பேசி நவில்வதும், இசை பட இயம்புவதும், தெளிவாகச் சாற்றுவதும் மனு ஒருவனே.

*ஜீவசகோதரர் சங்கர்:*

உணர்ச்சி மெய் உணர்வாக மாறுவதே பேரின்பம். நரன் தன் அகத்தை வென்று அறிவு தீபம் ஏற்றும் நாளே தீபாவளி. தேசிகரின் வாசகமாகிய தீர்த்தத்தில் நீராடுவதே கங்காஸ்னானம். பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவானது.

## 08-09-2024 ~ ஞாயிற்றுக்கிழமை ~ காஞ்சிபுரம் அவை
## தொகுப்பு: ஸ்ரீமதி. கவிதா வெங்கட்

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் திருவடி போற்றி அவை மலர்ந்தது.

*ஜீவசகோதரர் கௌதம்:*

பிறப்பெனும் பேதமையான அறியாமை, அறிவு வடிவாக வரும் ஆசான் அருளும் செம்பொருளைக் கண்ட பின்பே நீங்குகிறது. ஆசானின் ஆலவாய்ச் சூலில் மறுபிறப்பு பெற்று ஜீவதேகத்தில் நுழைந்து கோடிசூர்ய பிரம்மப் பிரகாசத்தை தரிசிக்கும் ஆகம துலக்க அறிவே ஆறாவது அறிவாகும். குருவருளால் தூங்காமல் தூங்கி சாமுன் சாகப்பழகும் செயல் செய்பவனே சன்மார்க்கி. வினை விதைக்கும் மனமே கலியன், அழி அவாவினன், திமிரறா இருளன். முழுமுதற் கடவுளாக கோடாயிதத்தால் நம் கொடுவினை தீர்க்கும் வித்தகராம் குருபிரானே வினாயகர். காலமற்ற காலாதீதன் உள்ள இடமே இல்லறமாக நம் சொந்த வீடாக உள்ளது. கோளரிவாள் கொண்டு நிக்கிரக நிலையில் நம்மை அனுக்கிரகிக்கும் குருவே கிரகஸ்தன். நரனாக வரும் ஒருவனை தேவ நிலைக்கு உயர்த்துவது குருவின் அன்பெனும் விசேஷம் ஒன்றே. பஞ்ஞபூத கணங்களின் பதியே கணபதி. கோடி மனுக்கு ஈந்நாலும் குறையாத சிமிழியின் மை கொண்டு, நம் அறியா மையை அறிய வைத்து நம்மை இம்மையிலிருந்து மறுமைக்கு அழைத்துச் செல்லும் அறிவின் வடிவே ஆசான்.

*ஜீவசகோதரர் சங்கர்:*

அலையும் மனதுடன் செய்யும் வணக்கம் யாவும் ஐயறிவுக்கு ஒப்பானதே. நாதமாகிய நன்மையை செவிமடுத்து வரமாக வாங்கி வந்த அமானிதக் கடனை தீர்ப்பதே நம் தலையாய கடமை. பிறவிப்பிணி தீர்க்கும் அவுஷதமே வா ஆன வேதாந்த சஞ்ஜீவியாக உள்ளது. ஆர்வ சித்தம் வைராக்கியம் நம்பிக்கை உள்ளோரே ஞான பதத்திற்கு உரியோர்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே னிறைவானது.



Copyright © AMNA Trust, Chennai October 2024

## 12-09-2024 ~ வியாழக்கிழமை அவை~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீ. தியாகராஜன்

பரிசுத்த ஆவித் தெய்வம் அருளிய **திருவளர் திருவே ஷெய்குகள் ஷெய்கே...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது.

*ஜீவசகோதரர் சங்கர்:*

மனுவின் சிரசில் இருப்பதே நித்திய திருவடி. தன்னை அறியச் செய்து மனுவைப் பிறவா னெறியில் ஆக்கி வைப்பவரே ஞான பண்டிதர்.



**திருமெய்ஞ்ஞானக் கொரல் 4ன் தொடர்ச்சி - குருபிரான் அருளமுதம்:**

மெய்யை அறிந்தவரே நாளின் சிறப்பறிவர். விதைத்த வினையின் பலனை யாவரும் நிச்சயம் அனுபவித்தே தீர்வர். உள்ளச்சத்துடன் கூடிய ஒழுக்கமே மெய்ஞானத்தின் திறவுகோல். ஆண்டவர்கள் அருளிய செயலுள்ள திருவாசகம் யாவும் நம் பொய் உடலுள் இருக்கும் மெய்யை அறியவே. வாழ்க்கை முறையாலும் கற்ற கல்வியாலும் அலையும் நம் மனதை னிறுத்த கடின வைராக்கியமும், கதி சாதனையும் வேண்டும்.

**பூரணப் புதையல் - குருபிரான் அருளமுதம்:**

சப்த சப்தாதிய சாயல்களை உணர்ந்த மெய்க்குருவின் சத்தத்திற்கு செவி கொடுப்பவரே மெய் உணர்வு பெற்று மெய்ஞானம் பெறுகின்றனர். திசைகளின் தலைவனான சூரியனே மனமாகவும், அதன் தன்மைக்கு ஏற்றவாறே 12 ராசி நிலைகளும் உள்ளன. சூரியன் உதித்த பிறகே ராகு காலம், எமகண்டம் வருகிறது. ஜல அம்சமான மனம் பற்றற்று அசையாத போதே ராசி நிலையின் ரகசியத்தை தன்னில் அறிய முடியும். இதை அறிந்த மக்களே ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்கள் என்ற குருபிரானின் அருளமுதுடனும் பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை நிறைவானது.

*னல்ல விரதமுடையவளே! குரு தேவர்க்கு அர்ப்பணமாகச் சமர்ப்பிக்கப்பெறும் வஸ்து எதுவோ, அதுவே எனக்குத் திருப்தியளிப்பது. ஸ்ரீ குருவின் பாதுகையாகிய முத்திரையையும், மூலமந்திரத்தையும், மகா ரகசியமாக வைத்துக்கொள்ள வேண்டும்.*

***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai

## 15-09-2024 ~ ஞாயிற்றுக்கிழமை ~ பவானி சிறப்பு அவை
## தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்

பரிசுத்த ஆவித் தெய்வம் அருளிய **முச்சந்நி தனிலே வைத்தார் முமூச்சுமார் வந்து கூடும் ...** என்ற பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**

மனுத்தலையுள் விளங்கும் சூட்சுமப் பொருளான மாமணி ஜோதியாகிய மறை பொருளை மனதுள் மலரச் செய்யும் மாதவ புருஷர்களே மாயோனாக திருமேனி தாங்கி பூவுலகிற்கு வருகிறார்கள். அவர்களின் அஞ்ஞன சலாகை மூலம் மூன்றாவது கண் திறக்கப் பெற்ற மெய் தேட்டம் கொண்ட மக்களே மரணமிலாப் பெருவாழ்வு பெறுகிறார்கள். எதார்த்த உள்ளம் கொண்டோரே குருவின் கருணையால் அறிவு அறியாமை இன்னதென அறிந்து, இறப்பொழித்து சன்மார்க்க மரபில் பயணிக்கிறார்கள். வள்ளல் பெருமான் ஸ்தாபித்த சித்தி வளாகத்தில், 7 மாய திரைகள் கடந்து 8ம் நிலையில் பிரகாசித்து கொண்டிருக்கும் அருட்பெருஞ்ஜோதியின் இரகசியம் அறிய வைத்து, பிறவாமை தரும் கல்வியே சாகாக் கல்வி. அதனை கற்பிப்பவரே கங்காளன். அனு தினமும் நாம் இறந்து கொண்டே இருப்பதை உணர வைத்து, இறவா வரம் தரும் இயல் மொழி அண்ணலுக்கு இசைந்தவர்களே இயற்கை உண்மை கடவுளை தரிசிக்கிறார்கள்.




அருட்பா வள்ளல் அருளிய சாகாத்தலை-வேகாக்கால்-போகாப்புனல் எனும் வேத முடியின் இரகசியத்தை அவரவர் உள்ளத்துள் உரிமையுற எதிர்முகத்தில் வைத்து போதிக்கும் போதனாச்சாரியரிடம் போதகம் பெற்ற மக்களே, ஜீவன் கண்ட ஜென்ம சாபல்ய குலமாக வாழ்பவர்கள் என்பது நிச்சயம்.

*ஜீவசகோதரர் குமார் (பவானி):*

கோடைவாய் விரிந்த குளிர்தரு நிழலாக, மேடைவாய் வீசிய மெல்லிய பூங்காற்றாக வந்து அவரவரின் அறியாமை இருளகற்றி, மனதின் தாகம் தீர்க்கும் தனிப்பெருங்கடலே மெய்க்குருபிரான். அவர்களின் குளிர் தரு நிழலாகிய நாதத்தின் மூலம் இளைப்பாறி இறப்பொழிந்து வாழும் வாழ்வே வள்ளல் பிரான் அருளிய மரணமிலாப் பெருவாழ்வு.

*ஜீவசகோதரர் சங்கர்:*

நம்பிய தன்னுயிர் தற்கொலை செய்யாமல், புலாலாகிய தன் தேகமே நான் என்ற நினைவை மறுத்து வாழும் மெய்க் குருபிரானை எல்லா மனித உயிர்களும் கை கூப்பி தொழும் எனக் கூறுவதே

**கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி**
**எல்லா உயிருந் தொழும்** **(திருக்கொரல் – 260)**

எனும் திருக்கொரல். இதனையே ஜீவகாருண்யம் என வள்ளல் பிரான் அருளியுள்ளார்கள். காருண்ய வடிவான குருபிரானின் தயவை பெற்ற மக்கள் யாவரும் வேத சாட்சியாக மெய்ப் பொருளை மெய்யாகவே உணர்ந்து இன்றளவும் மரணமிலாப் பெருவாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பது சத்தியமே.



Copyright © AMNA Trust, Chennai 

*ஜீவசகோதரர் விஜயகுமார்:*

இருதய கமல வாசனாம் இறைவனை அவரவரின் சிரசில் காட்டித் துலங்கச் செய்யும் துளப வேந்தரன்றி, மெய்யென வாய் புலம்பும் எவரும் இதனை அறியார். ஜீவனைக் குறிக்கும் அவரவரின் இறை நாமத்தை அறியாத புலையரே பொய்யை மெய் என்பர். ஆசான் அருளால் அதனை அறிந்தவரே அழிவற்ற பேரின்பப் பெருவாழ்வு வாழ்கின்றனர்.

*ஜீவசகோதரர் வடிவேலன்:*

*உபாய ஞானம் = நட்சத்திர ஒளி, உண்மை ஞானம் = சந்திர ஒளி, அனுபவ ஞானம் = சூரிய ஒளி* என வள்ளல் பிரான் அருளியுள்ளார்கள். ஞான சூரியனாக வரும் குரு கொண்டலின் அமுதவர்ஷிப்பின் மூலமே இயற்கை உண்மையை உணர்ந்து, சிவானுபவம் பெற முடியும். குருவருள் என்பது அறிவுக் கண்ணால் கண்டு, உள்ளமாகிய கையால் உணர்ந்து, செவிச்சுவையின் மூலம் ருசிக்கக் கூடிய ஒன்றாகும். திரிவேணி சங்கமத்தில் அந்தர் வாகினியான சரஸ்பதி நதி போல், பவானி நகரிலும் மூன்று நதிகள் கூடும் கூடுதுறை உள்ளது. இதே போல் ஒவ்வொரு மனிதனுள்ளும் அந்தர் வாகினியாக நுழையும் ஆசானின் அமுத மொழியான அவுஷதமே அருட்பெருஞ்ஜோதியாகி, பிறவிப் பிணியை அறவே அகற்றுகிறது என்ற பகிர்வுடனும் பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திர பாடலுடனும் அவை நிறைவானது.

## 19-09-2024 ~ வியாழக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. புன்னகை மகேஷ்குமார்

**ஆதியே அந்தமே அருமையான அருட்கடலே...** எனும் சிவானந்த போதம் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**திரு மெய்ஞானக் கொரல் வாக்கியம் 4ன் தொடர்ச்சி - குருபிரான் அருளமுதம்:**

உயிரை நம்பி வந்த உடல் உள்ள போதே நம் ஜீவனை அறிந்தே தீட்டு என்பதை விலக்க முடியும். ஆசான் அருளால் அகமியத்தில் ஆறாம் அறிவில் பிறப்பதே மறுபிறப்பு. இறைவன் படைத்த ஐயறிவு ஜீவ பேதங்களும் மனிதன் தன்னை அறிவதற்கே.

**குருபிரான் அருளமுதம்:**

உயிரின் ரகசியம் அருளும் வந்த வேதமே குருபிரான். குருவாகிய சிவன் மூலம் பெறும் சிவானுபவமே நம்மை சித்தனாக்கும். வேத சாட்சிப்படி வாழ்வதே நிஜ நிதி லாபகர வசந்த வாழ்வு. நரனை சங்காரம் செய்து புலன் பொறிகளை இயக்கும் அகமியப் பொருளை அறியச் செய்து மனுவாக மாற்றும் நித்தியரே குருபிரான். அனித்தியமே காட்டும் மனதை விட்டு நித்தியம் காட்டும் நம் தாயாதி சொத்தான அறிவை அறிவதே முதற் கடமை. நித்தியமான நிம்மதியான வாழ்வுக்கான அறிவைத் தருவதே ஆதி மார்க்க னீதி அவை. நாமமிட்டு பெருமாளை வழிபடும் சனிக்கிழமையும், பித்ரு பூஜை நடைபெறும் மகாளய அமாவாசையும் புரட்டாசி மாத சிறப்பாகும். சனி-ராகு-கேது மூன்றும் சேர்வதால் விளைவதே கேடு. நித்திய சொர்க்க வாழ்வை வழங்க வந்தவரே வள்ளல் பெருமான். அரை நொடிக்குள் மலமகற்றி அவரவரின் மெய்ப் பொருளை அறியச் செய்யும் சன்மார்க்க செயலைச் சாற்றுவதே ஆதி மார்க்க னீதி அவை.

**பூரணப் புதையல் - குருபிரான் அருளமுதம்:**

வினையால் வந்த பசி தீர்க்கும் விளைந்த பயிர் போல், வினை தீர்க்கும் நாதன் தீர்ப்பதே நம் அறிவுப்பசி. குருவின் பேரிரக்கத்தால் சாகாக் கல்வி கற்று, கண்ட சூக்குமம் தாண்டி, காஷாயம் அணிந்து, பத்தியத்தில் சாதித்து நித்தியனாகும் நிலை அருள்வதே பூரணப் புதையல். குருவின் நாதமான தெய்வ முதலே காலனை வென்று காலமற்ற இடத்தில் நம்மை குடியேறச் செய்யும். இருளைக் காட்டும் வெளிச்சப் பொருளே ஓரறிவாக விளங்கும் தெய்வம். அதை அறிய விடாமல் தடுக்கும் ஏழு மாயத் திரைகளை விலக்கும் செயலே மராமரம். ஜீவன் குடியிருக்கும் எல்லை திசையற்ற பெரு வெளியில் குடியேறி வாழும் தேவ ரகசியத்தை அறிய மதிச்சுமை தாங்கி வரும் பெரியோர்கள் அருளும் அறிவு விளக்கமே அருட்பெருஞ்ஜோதி. அதுவே நம் சுயம்பிரகாசப் பொருளை அறியச் செய்து நித்திய ஆனந்தத்தில் ஆக்குகிறது.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவானது.



Copyright © AMNA Trust, Chennai

## 21-09-2024 ~ சனிக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்

பரிசுத்த ஆவி தெய்வத்தின் திருவடி போற்றி அருட்பா வள்ளல் அருளிய **உலகநிலை முழுதாகி ஆங்காங்குள்ள உயிராகி...** என்ற பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**
மனுத் தோற்றத்தில் ஐயறிவு நுகர்விலேயே வாழும் நரன் யாவர்க்கும், ஐம்புல நுகர்வும் அறுசுவையும் ஒன்றே. ஜீவன் மற்றும் ஜாதியின் ரகசியமான நீதி எனும் பொருளான ஆறாவது அறிவை அறிந்து, நீதி வழுவா நெறிமுறையில் தலையிட்டவர் உயர்ந்த ஜாதி, தலையிடாதவர் தாழ்ந்த ஜாதி என்பது வேதத்தீர்ப்பு. ஒன்றே குலமான சுக்குலத்தின் ரகசியத்தை உணர வைத்து தன்னுலகம் காணச் செய்பவரே மெய்க்குருபிரான். ***பெருமாளுக்கு உகந்த புரட்டாசி மாத சனிக்கிழமை, பிரம்மவித்தையாகிய பெருமாள்தலின் சிறப்பை உணர்த்தும் நாளாகும். குருவருளால் இச்செயல் பழகியவனுக்கு சனியின் பாதிப்பு இல்லை. தசா புத்தியால் உண்டாகும் சனியின் தீமையிலிருந்து புரட்டி ஆசி நல்கும் குருவின் செயலே புரட்டாசி மாதத்தின் சிறப்பு.***

**கோடாயிதக்கூர் திருவாக்கியம் 188 - குருபிரான் அருளமுதம்:**
குருவானவர் நேர்முகத்தில் மக்களின் முகம் பார்த்து, பொய்யை மெய்யெனப் பற்றியிருந்த அறியாமை அகற்றி மெய்யறிவு பிரம்மலயத்தில் உலாவும் செயல் பழக்கி, ஜீவன் கண்ட ஜென்ம சாபல்ய குலமாக வாழச் செய்கிறார்கள்.

*ஜீவசகோதரர் குமார்:* **சத்தியவேதம் - யோவான் 14:1** *உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக, தேவனிடம் விசுவாசமாயிருங்கள்.* **எபேசியர் 2 : 20, 21** *தீர்க்கதரிசிகளின் அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டவரே அப்போஸ்தலர். இயேசு கிறிஸ்து தாமே மூலைக் கல்லாக இருக்கிறார். அவர் மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு கர்த்தருள் பரிசுத்த ஆலயமாய் எழும்புகிறது.*
கர்த்தராக வரும் குருபிரானே மூலைக் கல்லாக இருந்து பரிசுத்த ஆவியினால் நம் மூன்றாவது கண் திறந்து, பாவ எண்ணம் போக்கி இருதயம் கலங்காத மனதற்ற பரிசுத்தத்தில் ஆக்கி வைக்கிறார்கள். நினைவெனும் ஆகாயத்தில் அமானிதமெனும் அஸ்திபாரத்தின் மேல் கட்டப் பெறுவதே பரிசுத்த ஆலயமான தேவனுடைய வாசஸ்தலமாகும்.

**குருபெருமான் அருளமுதம்:**
கிறிஸ்தவர்களின் மூலைக்கல் என்பதும், இஸ்லாமியர்களின் காபாவின் கிழக்கு மூலைக் கல் என்பதும் வணக்கத்திற்கு உரியது. பிதா, கர்த்தர், தேவன் என்பவை குருவைக் குறிப்பதாகும். நம் இதயமும், மனமும் கலங்காதிருக்க குருவின் வாய்மையே துணை.

**பூரணப்புதையல் - குருபிரான் அருளமுதம்:** பூரணம் எனும் அறிவே முழுமை. குறைமனத்தின் பிழை ஒதுக்கும் அறிவை குருவினிடம் பெற்றிட மும்மலம் கருகி முச்சுடராகும். மனம் பிரண்டு அறிவாக மாறுவதே பிரளயனீதி. அவ்வைச் சார்ந்து மூதுரையான மறை மொழியை முழுமையாகப் பெற்றவரே அவ்வையார். அவ்வுகை வசமாகி நிர்க்குணத்தில் ஆன உத்தமி பத்தினியே அவுசாரி. ஜீவன் ஆதிமூல பரமாத்ம ஆவியுடன் சேர்ந்து மெய்யுணர்வு பெறும் அகம் சார்ந்த அறிவுத் துலக்கமே மெய்ஞ்ஞான தரிசனையாகும். பிறப்பென்னும் பேதமையான பித்தம் தெளிவிக்க பிறப்பறுக்கும் பிஞ்சகனாக வரும் மெய்க்குருவின் நாத மருந்து உண்டு செங்கனதி கங்கையில் நீராடி, பித்தம் தெளிந்து, சாவருமுன் சாகப் பழகுவதே சனியின் தோஷம் தீர்ந்து சன்மார்க்கி ஆவதற்கான வழி. ஞானத்தின் படிநிலைகளை உணர்ந்து பூரணனான இறைவனுடன் இரண்டறக் கலந்து வாழ வழி அருளும் ஆசானின் பாதம் பணிந்து வாழ்வோம், என்ற குருபிரானின் அருளுரையுடனும் சரவண நந்தவனத்தின் திருப்பணி ஆவணப் படக் காட்சி பகிர்வுடனும் பரிசுத்த ஆவி தெய்வத்தின் திருவடி போற்றி ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவானது.



Copyright © AMNA Trust, Chennai

## 22-09-2024 ~ ஞாயிற்றுக்கிழமை ~ காஞ்சிபுரம் அவை
## தொகுப்பு: ஸ்ரீ. கிருஷ்ணமூர்த்தி

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் திருவடி போற்றி ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது.

*ஜீவசகோதரர் கௌதம்:*
இறைவனின் நகல் வடிவமே போதும் என நினைக்கும் மனதின் செயலால் நாம் அசலைத் தேட மறுக்கிறோம். எண்சாண் உடலுக்கு பிரதானமான சிரசில்தான் சைவமும் அசைவமும் உள்ளது. கடலலை போல் அலையும் நமது மனம், அலையாமல் பாதுகாக்கும் உபாயம் அருள்பவரே மெய்க் குருபிரான். பிறர் மதிப்பிற்காக மாறாமல் இயல்பாகவே இருப்பவரே இயல் மொழி அண்ணல். அவரே அவதாரங்கள் பத்தையும் அவரவருள் அறிய வைக்கும் அவதார புருஷர். பூமி, புல் உள்ள வரை தீர்க்க தரிசிகள் னில உலகிற்கு வந்து கொண்டே இருப்பர். அவித்தைக்குள் இருக்கும் வித்தையைக் கற்றுத் தருபவரே விமலன். குருவருளால் நற்றாளை நாம் காணும் போதே நம்பிக்கையும், ஆறாம் அறிவை அறியும் போதே நம் அடையாளமும் தெரியும். நல்ல நிலத்தில் விழுந்த விதைகள் செழித்து வளர்வது போல் நேர் கொண்ட செவியில் விழும் ஆசானின் நாத தொனியே செழித்து வளரும். அனித்தியமான மனித தேகம் நிச்சயமான மரணத்தை நோக்கியே செல்கிறது. மரணத்தை தடுக்கும் மந்திரங்கள் யாவும் நாம் குடியேறி வாழும் நம் சொந்த வீடாக உள்ளது.

*ஜீவசகோதரர் சங்கர்:*
நெற்றிக்கண் திறந்து காட்டும் வல்லபம் உள்ளவரே குரு. இறைவனின் சாயலில் வந்த மனிதன், தன் இறைவனை காணும் இடம் - அகத்தில் சத்தம் பிறக்கும் இடமாகிய கோவில் எனும் சப்தஸ்தானமாக உள்ளது. அகமியத்தில் இறைவன் இருக்கும் கோபுரத்தை தரிசனம் செய்தால் நம் பாவம் தீரும். சதாசிவமாகிய நெற்றியில் கங்காளன் பூசும் ஆலவாயான் திருனீறே என்றும் மங்காது. நோயற்ற வாழ்வென பெரியோர்கள் கூறியது பிறவி நோய் அற்ற வாழ்வைத்தான். பிறவிப் பிணி தீர்க்கும் சஞ்சீவி மூலிகையை கொண்டு வரும் வாயு புத்திரனே குருபிரான், அவர்கள் தரும் பேரறிவு கொண்டு அனுபவிப்பதே பேரின்பம்.

பரிசுத்த ஆவி தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 22-09-2024 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி அவை
## தொகுப்பு: ஸ்ரீமதி. விஜயசித்ரா



பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மோதய மெய்வழிச் சாலை ஆண்டவர்களின் பொற்பாதம் பணிந்து **அந்நமே சிந்நை பதிந்ந...** என்னும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை உதயமானது.

*ஜீவசகோதரர் கிரகதுரை:* உடம்பின் பயன் உள்ளிருக்கும் உத்தமனைக் கண்டு பிறவாமை பெறுவது. இயற்கை உண்மைப் பொருளாய், இருதயப் பிரகாசமாய், அரூப வடிவத்தில் இருப்பதே கடவுள் என்னும் பேராற்றல். ஜீவன் அவாவுடன் தாவி மனமாக அலைவதை, அறிவாக மாற்றி நம் வினை தீர்ப்பவரே குருபிரான்.



Copyright © AMNA Trust, Chennai 

*ஜீவசகோதரர் பழனிக்குமார்:* இறை தூதர்கள் வெவ்வேறு மொழிகளில் அருளிய வேதங்களின் செயல் யாவும் ஒன்றே. மரணம் நோக்கிச் செல்லும் நம் வாழ்நாளை கைலாய அவுஷதம் தந்து மரணம் தீர்க்க வந்ததே வேதங்கள். நவபாஷாணமாக இருந்த நவக்கிரகங்களை நவமணிகளாக மாற்றும் பிரம்மவித்தை செயல் அருள்வதே வேதம். வந்த வேதமாக திருவுரு தாங்கி வரும் பரமாத்மா தன்னை அறிவிக்கும் போதே நம்மை நாம் அறிய முடியும்.

**குருபிரான் அருளமுதம்:**

நான்மறையரசு பிரம்மா அருளிய நான் மறையின் நான்கு தேக ரகசியம் உணர்ந்த அதிகாரண கர்த்தர்கள் வைசம்பாயனர், ஜைமினி அருளியதை நாடி வந்த நால்வரையும் நான்மறைக்கு உரியோராக ஆக்கியவரே தக்ஷிணாமூர்த்தி. குருவருளால் வேதம் பழகித் தேர்கையில் புறக்கரணங்கள் நான்கால் வீணாகும் கலைகள் பாழ் போகாது. கலைகளின் தலைவனான மனதை திருத்தி பிதுங்காமல் மோனத்தில் மோகம் கொண்டால் இறவாமையும் பிறவாமையும் கைவரவாகும்.

*ஜீவசகோதரர் ராஜேஷ்:* நீரின்றி அமையாது உலகு. நிலமின்றி அமையாது பூமி. ஐவகை நிலமமைத்த ஆகாயம் போல் நினைவெனும் ஆகாயம் அமைத்த நிலமே நம் தேகம். மலை போல் சலனமற்று வாழும் பெரியோரை நாம் சார்ந்திருப்பது **குறிஞ்சி** நிலவாழ்வு. நம் பாவங்களை சுடும் காடான குருவின் திருப்பார்வை சார்ந்திருப்பது **முல்லை** நிலவாழ்வு. வயல் நிலமாகிய செவியில் வித்தகப் பெருமான் விதைக்கும் வித்தில்லா வித்ததனை சார்ந்திருப்பது **மருத** நிலவாழ்வு. அளக்க முடியாத கடல் போல் அறிவுக் கடலாக வரும் ஆசானைச் சார்ந்திருப்பது **நெய்தல்** நிலவாழ்வு. பாலைவன மனதை அறிவாகிய சோலை வனமாக்கும் குருவின் வாய்மை எனும் கொண்டல் மழையைச் சார்ந்திருப்பது **பாலை** நிலவாழ்வு என அறிவதே அறிவு.

*ஜீவசகோதரர் ராஜமகேஷ்:* இறைவனின் படைப்பில் ஒன்று முதல் ஐயறிவு உள்ள உயிர்களின் தேவை இரை, இணை, இருப்பிடமே. ஆறறிவு கொண்ட மனுவின் தேவையோ அளவற்றது. குருவின் பாத கமலங்களை பற்றாத மனம், வற்றாத ஆசையுடன் அதன் பின் என்ன? அதன் பின் என்ன? என அலைவதாகவும் பற்றிய மனமோ பற்றை விட்டு பரமபதத்தைப் பற்றி பண்படுவதாகவும் கூறுகிறார் ஆதிசங்கரர்.

*ஜீவசகோதரர் பாலா:* வேத வசனங்களை செயலாக்கும் குருவிற்கான காணிக்கை நம் தலையே. உடல் மற்றும் உள்ளத்தின் களைப்பு தீர்ந்தாலும், உயிர் களைப்பு தீராமல் பிறவியில் சிக்கி சுழல்கிறது. மன்னுயிர் அனைத்தும் தன்னுயிர் போல் எண்ணும் குருபிரானே காமப்பிறப்பில் பிறந்த நம்மை மார்க்க னாதத்தால் தேவப்பிறப்பில் ஆக்கி அதோ கதியைப் போக்கி, நல்ல கதி அருள்கிறார்கள்.

*ஜீவசகோதரர் மோகன்:* வேதத்தை விளக்கித் தரும் பாரவான்களின் விஸ்வரூபச் செயல் நடைபெறும் குருஷேத்திரமாக விளங்கிக் கொண்டிருக்கும் ஆதி மார்க்க னீதி அவையே னபுசுடைய வணக்கத்தை மாற்றி, முறையான மெய் வணக்கத்தை கைக்கொள்ளச் செய்கிறது.

*ஜீவசகோதரர் குருபிரசாத்:* தன்னறிவில் சாய்ந்து சரியான வழியென நரக வழி செல்லும் அறியாமை அகற்றி, நல்வழி ஈதென நயந்து காட்டி அறிவை அறிய வைக்கும் குருவை சரண் அடைந்தவர்க்கே சாயுச்ய பதம் கிட்டும்.

**குருபிரான் அருளமுதம்:**

அருள் உண்ண அழைப்பதே ஆதி மார்க்க னீதி அவை. நீதி எனும் பொருளான மனுவை அடையாளம் காட்டும் வாக்கு போல், அவனைப் படைத்த நித்தியரின் அடையாளமும் வாக்கெனும் செல்வாக்கே. செல்வாக்கான அவர்களின் சொல்வாக்கே அத்வைதத்தில் நம்மை ஆக்கி வைக்கிறது. மாறும் உலகில் மாறாதிருக்கும் இறைவன் போல் அகமியத்தில் மாறாதிருக்கும் அறிவை அறிவதே ஜென்ம சாபல்யம். அரியானை அறிய வைக்கும் அரிய செயல் ஒன்றையே நோக்கமாகக் கொண்டதுதான் ஆதி மார்க்க னீதி அவை என குருபிரான் அருளியதும் பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவானது.



Copyright © AMNA Trust, Chennai October 2024

## 26-09-2024 ~ வியாழக்கிழமை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்

பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மோதய மெய்வழிச் சாலை ஆண்டவர்களின் திருவடி போற்றி அவை இனிதே உதயமானது.

**குருபிரான் அருளமுதம்:**
தன்னை அறியும் தெளிந்த அறிவைப் பெற மெய்க்குருவின் துணை வேண்டும். தட்டுங்கள், கேளுங்கள், தேடுங்கள் எனும் அகமியச் செயலின் ரகசியம் அறிவிக்க வந்ததுவே வேத வேதாந்தங்கள். இறப்புக்கு பின்வரும் வாழ்வை அறிவுறுத்தும் சடங்குக்குரிய நாளே மகாளய அமாவாசை. மரணம் எனும் பெரும் தோஷத்தை மாற்றவல்ல, மறந்து மறைந்தே போய்விட்ட, ஜீவன் மேல் அன்பு சாய்ந்து எமவாதை தீர்க்கும் செயலே பிரதோஷம். நித்திய வித்தாகிய பஞ்சாட்சரம் கொண்டு அஞ்ஞான இருளை அகற்றிய ஞான சூரியனே பிரம்மோதய மெய்வழி சாலை ஆண்டவர்கள்.

**திருமெய்ஞ் ஞானக் கொரல்: வாக்கியம் 4ன் தொடர்ச்சி - குருபிரான் அருளமுதம்:**
மாயா சரீரமாகிய தூலமின்றி ஒருவனை ஜீவ ஏற்றத்தில் ஏற்ற முடியும் என்பவனே அந்தரங்க நாஸ்திகன். நமது அறியாமையை விலக்கி நால்வகை யோனி, எழுவகைத் தோற்றம் அனைத்தும் அவரவருள் அறிந்து வாழ அருள் பாலிப்பவரே பிரம்மநிஷ்டர். ஞானிகள் அருளிய மெய்வணக்கம் மெய் உணர்வு தூண்டப் பெறுவதற்கே.

**பூரணப்புதையல் - குருபிரான் அருளமுதம்:**
நாள், கோள்களின் ரகசியம் அறியாதோரே சீரழிந்த உலக மக்கள். அறிவறியாமல் மனவழி சென்று ராகு காலம், எமகண்டத்தில் சிக்குபவனே இருள் மனத்தவன். மதங்களின் அடிநாதம் மறலி கை தீண்டாமை என அறியாத தோஷத்தால் வருவதே மத பேதம். உள்ளும் புறம்புமாக இருக்கும் ஜலால் ஜமால் எனும் சிவ சக்தி நிலையை அறிய குருவருள் வேண்டும். புருவ நடுப்பூட்டாகிய காலமற்ற இடமே சர்வ பாவமும் தீர்க்கும் இடமாகும். சூலெனும் ஞானக்கரு விளைந்த அடையாளமே வாய்மைத் துலக்கம் என குருபிரான் அருளியதும் பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவானது.

## 28-09-2024 ~ சனிக்கிழமை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்

பரிசுத்த ஆவித் தெய்வம் அருளிய **தந்நருள வேண்டுமென்ற மைந்நர் தம்மை...** என்ற திருப்பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது.

*ஜீவசகோதரர் சங்கர்:*
வான்பதித் தந்தை தனிகைமணிப் பிரானவர்கள் தலைவழி தாங்கி வந்த மதிச்சுமையை சாலை ஆண்டவர்கள் சிரமேற் தாங்கி சர்வ சன்னதங்களும் பெற்று மந்ரமணி வரதராகி, தன்னை அண்டி வந்த மக்களுக்கு திரு ஆலவாய் திறந்து அண்டாண்ட முடி காட்டி முடிவில்லா நித்திய மெய்வாழ்வில் குடியேற்றினார்கள்.

**கோடாயிதக்கூர் வாக்கியம் - 189:** அன்பே சிவம் எனும் மந்திர திருவசன மெய்ச் செயலை அன்புருவாக வரும் குருபெருமானின் இரக்கமே நம்மிடம் உணர்த்தி அழிவுடலை அழியாமையில் ஆக்கி வைக்கிறது.

*ஜீவசகோதரர் விஜயகுமார்:*
**பரிசுத்த வேதாகமம் - ஹீப்ரு அத்தியாயம்-9 திருவசனம் - 2: 3: 4** பரிசுத்த ஸ்தல ஆசரிப்பு கூடாரம் ஆசானின் பரிசுத்த ஆவியாகவும், 7 முகங்கள் கொண்ட குத்து விளக்கு எழுவகைப் பொருளான அமானிதமாகவும், மேசை என்பது அறிவிருக்கும் தலமாகவும், தேவ சமூக அப்பம் ஜீவனுக்கான உணவாகவும், மகா பரிசுத்த ஸ்தலத்தின் பொன்னாலான தூப கலசமும்,



Copyright © AMNA Trust, Chennai 

உடன்படிக்கை பெட்டியுள் இருக்கும் மன்னாவும், தங்க உடலுக்குள் நம்மை குடியேற்றும் வல்லபமுடைய குருபிரானின் னாதத் தொனியை குறிக்கும் பரிபாஷையாக உள்ளது.

*ஜீவசகோதரி பானுமதி:*
**திருக்குரான் - அல்ஹஜ் - அத்தியாயம் – 22:** மூன்று குழுவினர்களை குறித்து அருள்கிறது.

1. **இறைவனுக்கு இணை வைக்கும் மக்கா வாசிகள்:** தாய் மடியில் பிறந்து ஆறு பிறப்புகள் மாறி வந்து மெய்குருபிரான் திருமுகத்தில் ஏழாம் பிறப்புடலம் எடுத்த பின்னரே, தனக்கு உவமையிலா இறைவனுக்கு இணை வைக்க கூடாது என்ற மெய்ம்மை இரகசியம் உணர்ந்த மக்கா வாசிகளாக வாழ முடியும்.
2. **இஸ்லாத்திற்கும் இறை மறுப்புக்கும் இடையே தடுமாறும் முஸ்லீம்கள்:** இஸ்லாம் என்பது உயிராகிய நடுப்பொருளை உணர்த்தும் இறை மார்க்கம் என உணர்ந்தோரே தன் மதத்தின் மீது மாறா பற்றுடைய உண்மையான முஸ்லீம்கள்.

3. **வாய்மையுள்ள நம்பிக்கையாளர்கள்:** எவ்வுயிர்க்கும் தீங்கு இழைக்காத சொல்லே வாய்மை. தன் உயிரின் லட்சணம் அறிந்த ஞானிகளின் அமுத னாவிலிருந்து பிறங்கும் வாய்மையை கைப்பற்றிக் கொண்டவர்களே வாய்மையுள்ள இறை நம்பிக்கை உள்ளவராக வாழ முடியும்.

*ஜீவசகோதரர் சங்கர்:* அலிபு - லாம் - மீம் எனும் முப்பொருளாகிய மெய்ம்மை இரகசியத்தை உணர்த்த வந்ததுவே சர்வ வேதங்களும். தன்னை அறிந்த பெரியோர்களின் தயவால்தான் ஒவ்வொரு மனுவினுள்ளும் முப்பொருளும், ஒன்றான வேதமுடி இறை பொருளாக இலங்குவதை அறிந்து அடைய முடியும் என்ற பகிர்வுடனும் பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை இனிதே நிறைவானது.

## 29-09-2024 ~ ஞாயிற்றுக்கிழமை ~ காஞ்சிபுரம் அவை
## தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்

பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்களின் பொற்பாதம் பணிந்து அவை உதயமானது.

*ஜீவசகோதரர் கௌதம்:*
கங்காளன் பூசும் கவசத் திருநீறும், நாவினாற் சுட்ட வடுவும் மாறாது என்பது ஞானிகள் வாக்கு. பெரியோர்களால் எடுத்து பூசப் பெறும் திருநீறே கவசம். கவசமெனும் நம் கவனத்தை ஜீவன் மீது பாய வைத்து நம்மை சிவமயமாக்கும் பெரியோர்களின் அருளமுதமே ஆலவாயான் பூசும் திருனீறு. சாலை ஆண்டவர்கள் தங்களின் ஆதி மான்மியத்தில் **தீண்டா திலதம் தூண்டா மணியும் பாசமதகன்ற பதிபசு முகமும் னேச காயத்ரி னின்று கண்கண்டு ஜீவனிருப்பு சிவகெங்ஙை அங்ஙே** என அருள்கிறார்கள். கங்கை என்பது இறைவனைக் காட்டும் கேசரி எனும் உஜூது நடையாகும். அகமியத்தில் தென் திசையில் இருக்கும் சிவன் இருக்கும் திசையே குடதிசையான - எல்லை திசையற்ற கங்குல் பகலற்ற இடமாகும். ஆசான் அருளால் ஆகாய கங்கையில் நீராடி பாவம் தீர பரமபத வாழ்வு கைவரவாகும்.

*ஜீவசகோதரர் குமார்:*
சர்வ மதங்களின் அடிநாதம் அறியாதவனே தன் மதத்தின் மேன்மையை அறியாதவன். நம் காலக்கணக்கை அறிவித்து இறுதியாக வரும் மரணத்தை தீர்க்கும் மெய்வழி ஆண்டவர்களே இறுதித் தீர்ப்பர். இறுதி பரியந்தம் வரை குருவின் அன்புக்கு பாத்திரமானவனே பாக்கியவான். வேத வேதாந்த பரி பாஷைக்கான திறவு கோலின் இருப்பிடமே ஆதி மார்க்க னீதி அவை.

**குருபிரான் அருளமுதம்:**
நாம் அறிவை பெற்றது நம்மிடம் இருக்கும் இறைவனை அறியவே. அறியாமையில் உறங்கும் நம் ஜீவனை தட்டி எழுப்பவே பஞ்ஞனை எழுச்சி பாடல். குரு உபதேசிக்கும் தன்னை



Copyright © AMNA Trust, Chennai 

அறியும் தகும் அறிவு கொண்டே, பிறவாமை பெற முடியும். ஞான இந்திரியங்களின் வாயிலாக நம்மை வழிநடத்தும் அறிவே சாரதி. **ஓங்கு நிராமயம் பாங்குறு கருமை** எனும் இறை நிலையான தூய அறிவை அறிந்தவனே ஞானம் பெற்றவன். மெய்வழி குழந்தைசாமி கவுண்டர் ஐயா மெய் ஞானம் இன்னதுதான் என சாலை ஆண்டவர்கள் அருளியதை வேத சாட்சியாக பல நிலைகளில் அருளி உள்ளார்கள். குருவானவர் சங்காக ஊதிய நால் வேதமும், கருவாசலில் நாம் மீண்டும் புகாமல் காத்திட வந்ததுவே. உடல் பற்றுள்ளவனே சம்சாரி, உடல் கடந்து ஆத்ம நிலையில் இருக்க வல்லவனே சன்னியாசி என குருபிரான் அருளியதைத் தொடர்ந்து சாலை ஆண்டவர்கள் அருளிய ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 29-09-2024 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி அவை
## தொகுப்பு: ஸ்ரீமதி. அருணா சுதர்சன்

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் திருவடி போற்றி அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:** ஒருருளை தேவரதம் மூலம் சிவராஜ பாட்டையில் நம்மை வழிநடத்தும் குருபிரானே நம் அறியாமையை கணித்து அகற்ற வல்லவர். பொய்யுலக வாழ்வின் மாசகற்றும் நல்வழியே மெய்வழி.

*ஜீவசகோதரர் வளவன்:* சர்வ உயிர்களிலும் உறைந்துள்ள அறிவை அறிந்து உணர்பவனே ஞானி என்கிறார் ஆதிசங்கரர். சுத்த நினைவில் மனமாகிய அசுத்தம் கலவாதிருக்கச் செய்வதே மெய் வணக்கம். மாயை மறையுமிடமே மன நிம்மதி பெறும் ஆண் பெண்ணற்ற இடம். இறைவன் விதித்த கட்டளை மனிதன் தன்னை அறிவதே.

*ஜீவசகோதரர் பிரபு:* 1 முதல் 5 அறிவு வரை உள்ள ஜீவபேதங்கள் யாவும் பிறப்பு இறப்பை அறியாமலும், மனிதன் ஒருவனே அதனை அறியும் ஆற்றல் பெற்றவனாகவும் உள்ளான்.

*ஜீவசகோதரர் ஆலன்:* பிறப்பு இறப்பின் ரகசியமறிந்து மீண்டும் பிறவாதிருப்பதே மரணமிலாப் பெருவாழ்வு. சலிப்பையே தரும் ஐம்புல நுகர்வின் புலன் இன்பம் விட்டு பேரின்பம் அனுபவிக்க கற்றுத் தருவதே மெய்க்கல்வி. மெய் உயிரை, பொய்யுடல் தாங்கி வரும் குருபிரான் அருளும் செவிச் செல்வம் மூலம் அறிவதே சுகபிராப்திக்கான வழி. தேவனின் பரிசுத்த ஆவியில் பிறந்தவரே பிறவாமைக்கு உரியவர்.

*ஜீவசகோதரர் பாலாஜி:* மனித தத்துவம் உணர்த்தவே சிலா ரூபங்களும், மதங்களும் வேதங்களும் ஆகமங்களும் உள்ளன. மன மயக்கத்தால் உண்டாகும் மரணம் தீர்க்கும் மார்க்கமே சன்மார்க்கம். மெய்வழி குருமார்களின் மேல் நோக்கமே நம்மை வீடடையச் செய்யும்.

*ஜீவசகோதரர் பார்த்திபன்:* குருபிரானின் மாசற்ற இரக்கம் மூலம் நாம் சாகாக் கலை கற்று அகமியச் செயலான பாவ புண்ணியம் அறியும் பொழுதே அடக்கத்தை மடக்கிப் பிடிக்க ஏதுவாகும். குருவருளே நாம் தன்னறிவில் சாயமால் வேதவழி வாழ்வதற்கான வழிகாட்டியாகும்.

*ஜீவசகோதரி வளர்மதி:* அசலான இறை பொருளை அறிய வைக்கும் குருவின் வாய்மையே நம் பிறவிப் பிணி தீர்க்கும் மாமருந்தாக, மேலான செவிச் செல்வமாக உள்ளது.

*ஜீவசகோதரி மாலதி:* அறிவு மாணிக்கமாம் ஆறாம் அறிவை அறியச் செய்து, அறிவுப்பசி தீர்க்கும் குருவின் செயலே விருந்தோம்பல். நித்தியப் பொருள் கொண்டு அனித்தியப் பொருளை நீக்குவதே நீத்தார் பெருமை. நம் ஜீவனை சிவமாக்கும் ஆசானின் அன்பே அன்புடைமை. பெரியோர்கள் அருளும் பரிபாஷை கொண்டு அவர்களின் வல்லபம் அறிவதே தன்னை அறிதல். அகர வடிவாக வரும் குருவை சார்ந்தவனே மனிதன். பிறப்பறுக்கும் மாதவ மருந்தாக இருப்பது ஆசானின் நாதமே.



Copyright © AMNA Trust, Chennai 

*ஜீவசகோதரி சரஸ்பதிசேகர்:* சர்வ வேதங்களும் உணர்த்தும் ஒரு பொருளே பஞ்சாட்சரமெனும் நித்திய ஆனந்தம் தரும் சுயம் பிரகாசப் பொருளான அமானிதம். குருபிரான் பூசும் அழியாத கவசத் திருநீறைப் பெற்றவரே வினை தீர்ந்து நீதி எனும் பொருள் ஆன நித்தியராவர்.

**குருபிரான் அருளமுதம்:** அழிவற்ற நித்திய உடலே நாம், என உணரச் செய்பவரே மெய்க் குருபிரான். கசப்பின் சிறப்பும், இனிப்பின் சுவையும் அடங்கியுள்ள ஆறாதாரமும் ஆசான் அருளால் அறிந்தவரே ஆரூரார். பொய்யுலக வாழ்வின் மாசகற்றும் நல்வழியே மெய்வழி. ஈதல் இசைபட வாழ்தலே ஞானத்தின் சுருக்கமான வழி. வீண் மனுவை ஈசனாக்குவதே செவிச்செல்வம். அதனை அறியாதவனே ஏழை. செவித்திறன் குறைந்த ஒருவன் அதைக் கேட்டு உணர்ந்து பெரும்பயன் பெறும் ஒரே ஒரு செயலுக்கு உரியதே மனிதனின் மிகச் சிறந்த கண்டுபிடிப்பான காதொலிக் கருவி. குருவின் சொல் மொழியை செவி மடுப்பவனே எமன் எல்லையில் வெற்றி காண்பான். மெய்க் கல்வியை ஓயாது படிக்க மெய்உணர்வு ஓங்கும் என குருபிரான் அருளியதும், பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவானது.

*லௌகீகக் கிரிகையாதிகளால் சீடன் ஞான ஹீனனாகிப் பவக்கேட்டில் வீழ்கின்றான். அதை விட்டு ஞானகுரு இச்சைப்படி னடந்நால் அவனது சகல கருமங்களும் னிஷ்கர்ம மாகின்றன.*

***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai

**இசை வகுப்பு**
**தொகுப்பு: ஸ்ரீமதி. லாவண்யா வாசுதேவன்**

**08-09-2024 ~ ஞாயிற்றுக்கிழமை**

பரிசுத்த ஆவித் தெய்வம் அருளிய **னடந்நறியாப் பெருங்னாட்டில்...** என்ற பாடலுடன் அவை மலர்ந்தது. மேலும், தோடி ராகப் பாடல்கள் பாடுவதற்கான பயிற்சி வழங்கப் பெற்று அவை இனிதே நிறைவானது.

**22-09-2024 ~ ஞாயிற்றுக்கிழமை**

பரிசுத்த ஆவித் தெய்வம் அருளிய **வாஞ்ஞாலி பழம் புலமை...** என்ற பாடல் மோகன ராகத்தில் பாடப் பெற்று அவை மலர்ந்தது. மேலும் மோகன ராகப் பாடல்கள் பாடுவதற்கான பயிற்சி வழங்கப் பெற்று அவை இனிதே நிறைவானது.

**29-09-2024 ~ ஞாயிற்றுக்கிழமை**

பரிசுத்த ஆவித் தெய்வம் அருளிய **ஆறிரு சமயத் திற்கும்...** என்ற ஸ்தோத்திரப் பாடல் மோகன ராகத்தில் பாடப் பெற்று அவை மலர்ந்தது. மேலும் மோகன ராகப் பாடல்கள் பாடுவதற்கான பயிற்சி வழங்கப் பெற்று அவை இனிதே நிறைவானது.

# குரு வா ஆழ்க! குருவே துணை!

*தேவகுருமுகமாக அடையப்பெற்ற யாவும் முத்திப் பயன் அளப்பனவும், பாவத்தை அறவே ஒழிப்பனவுமாம். எது எது தனக்கு இதமான, அதாவது னன்மையான வஸ்துவோ, அந்நந்நத் திரவியத்தைக் குருசன்னிதியில் வஞ்ஞிக்காது சமர்ப்பித்தல் வேண்டும்.*

***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai 

# செப்டம்பர் 2024 மாதம் நடைபெற்ற அவை நிகழ்வுகள்

### 05-09-2024 ~ வியாழக்கிழமை

குருபிரான் **சாலை இரவி அப்பா** அவர்கள் முன்னிலையில் னன்மன சகோதரி கீதா அவர்களின் இளைய மகள் **நந்தினி - விக்னேஷ் ராஜா** இவர்களின் திருமணம் சென்னையில் நடைபெற்றது.




### 06-09-2024 ~ வெள்ளிக்கிழமை

குருபிரான் **சாலை இரவி அப்பா** அவர்கள் ஆசீர்பாதத்துடன் னன்மன தம்பதியர் ஸ்ரீனிவாசன்-கீதாலட்சுமி அவர்களின் மகன் **அரவிந்த் கணேஷ் - மீனாட்சி பிரியங்கா** இவர்களின் திருமணம் சிவகாசியில் நடைபெற்றது.






Copyright © AMNA Trust, Chennai 

**07-09-2024 ~ சனிக்கிழமை**

குருபிரான் **சாலை இரவி அப்பா** அவர்கள் முன்னிலையில் வினாயகர் சதுர்த்தி விழா னாயகன் இல்லத்தில் இனிதே நடைபெற்றது. அனைவருக்கும் இரவு உணவு வழங்கப்பெற்றது.

**15-09-2024 ~ ஞாயிற்றுக் கிழமை**

குருபிரான் **சாலை இரவி அப்பா** அவர்கள் ஈரோடு பவானியில் எழுந்தருளி ஞான தேட்டமுடைய மக்களை சந்தித்து அருளமுத வர்ஷிப்பு வழங்கினார்கள். அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பெற்றது.
















Copyright © AMNA Trust, Chennai

## ஆதி மார்க்க னீதி அவையின் வருங்கால நிகழ்வுகள்

| நாள்/ இடம் | னிகழ்வுகள் |
|---|---|
| **07-11-2024 / சிவகாசி** | குருபிரான் **சாலை இரவி அப்பா** அவர்கள் முன்னிலையில் ஜீவதம்பதியர் செந்தில் - சண்முகப்பிரியா (சிவகாசி) அவர்களின் திருவளர்ச் செல்வி **மகாலட்சுமி மகிமா - ராம் நாராயணன்** இவர்களின் திருமணம் சிவகாசியில் நடைபெற இருக்கிறது. |
| **07-11-2024 / வாலாஜாபேட்டை** | குருபிரான் **சாலை இரவி அப்பா** அவர்கள் ஆசீர்பாதத்துடன் ஜீவதம்பதியர் சுந்தர் – பொம்மி (பிரம்மதேசம்) அவர்களின் திருவளர்ச் செல்வி **S. ஜான்சி - கிரண்குமார்** இவர்களின் திருமணம் வாலாஜாபேட்டை, பாலாஜி மஹாலில் நடைபெற இருக்கிறது. |
| **01-12-2024 / சென்னை** | **மெய்வழி குழந்தைசாமி கவுண்டர் ஐயா** அவர்களின் அவதாரத் திருநாள் (29-11-2024), குருபிரான் **சாலை இரவி அப்பா** அவர்கள் முன்னிலையில், சென்னை அண்ணாநகர் **Sea Shell Restaurant-ல்** நடைபெற இருக்கிறது. |


Copyright © AMNA Trust, Chennai

**குருபிரான் தங்களின் திரு நோக்கினின்றும் நோக்கிய பிரகாரம் ஆதி மார்க்க னீதி அவையின், 2024 செப்டம்பர் மாதம் குருபாதம் போற்றி நல்லுணர்வுடன் நல்லுள்ளம் கொண்டு நன்கொடை வழங்கிய நன்மக்களின் எண்ணிக்கை - 80**

**அனைவருக்கும் நன்றி !!!**

**AMNA அறக்கட்டளைக்கு நன்கொடை வழங்க ஆர்வம் உள்ளவர்கள், கீழ்கண்ட வங்கிக் கணக்கில் அனுப்புமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.**

**Account Name: Aathi Margha Neethi Avai**
**Account Number: 50200047470073**
**IFSC: HDFC0000323**
**Branch: Mylapore**



Copyright © AMNA Trust, Chennai

All Rights Reserved

***Published by:***
***AMNA TRUST (Registration No. 163/2019)***
***13/2, Hyder Garden 2nd Street, Otteri ,***
***Chennai – 600012***

***www.amnatrust.org***

**Contact Us**:

*Email: write2amnatrust@gmail.com*

*YouTube Channel: https://youtube.com/c/amnatrust/*

*Facebook Page: https://www.facebook.com/amnatrust/*

***பின்குறிப்பு***: *இம்மின்னணுச்சஞ்ஞிகையில் தவிர்க்க இயலாது வரும் சில தட்டச்சுப் பிழைகளை அங்கத்தினர்கள் பொறுத்து அதனைத் தங்கள் பிரதிகளில் திருத்தி படித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். பிழைகளைத் தவிர்ப்பதற்கான முயற்சியை வெளியீட்டு குழு தொடர்ந்து மேற்கொள்ளும்.*

***The Editorial Team:***

*Shri. Sankar, Sivakasi*
*Shri. Venkatesa Muthu, Chennai*
*Shri. Vadivelan, Chennai*
*Shri. Manimaran, Chennai*
*Shri. Thiyagarajan, Chennai*
*Shri. Chiranjeevi, Chennai*

*Issue 39 – Month: October 2024*